ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2342/25 - 2023 ජූලි මස 26 වැනි බදාදා - 2023.07.26
**2342/25 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39(1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2008.10.30 ஆந் திகதிய 1573/16 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 298 ஆம் இலக்க 2008.10.23 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்பட்டவில்லை ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2008.10.30 ஆந் திகதிய 1573/16 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 298 ஆம் இலக்க 2008.10.23 ஆந் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : LD/05/2007/OCHW/394.
பிரதேச செய. குறிப்பு இல. : பிய/3/1/1/256.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, யூன் 21.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச செயலாளர் பிரிவில் அதிகாரி பற்று சிறு பிரிவில் இஹல பியன்வில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. கம 3697, 2009.09.01 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 84 – ஜம்புகஹ வத்தை - விஸ்தீரணம்: 0.1430 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 62, 78, 85 மற்றும் 86; கிழக்கு: துண்டு இல. 85 மற்றும் 86; தெற்கு: துண்டு இல. 61, கால்வாய் மற்றும் இந்த காணியின் எஞ்சிய பகுதி; மேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி, மலதொல வத்தை வீதி மற்றும் துண்டு இல. 83.

EOG 07 -0245

1A – G39972 – 19(2023/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.